# திருப்பூர் மாவட்டம்

# முத்தூர் பேரூராட்சி

**ந.க.எண்: 77/2010** **நாள் :17.05.2010**

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டம் முத்தூர் பேரூராட்சியில் கீழ்கண்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முத்தூர் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 01.06.2010ம் தேதி **செவ்வாய்கிழமை** மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரை இடப்பட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் இதர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 01.06.2010ம் தேதி **செவ்வாய்கிழமை** மாலை 3.30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **31.05.2010ம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00** மணிவரை இப்பேரூராட்சி அலுவலகத்தில் ஒவ்வொரு வேலைக்கும் உரிய தொகை மற்றும் விற்பனை வரியையும் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான செலுத்தப்பட்ட தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது, ஒப்பந்த ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்த வேண்டிய காப்பு தொகை சால்வன்சி தொகை ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை இவ்வலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். **மேலும் விபரங்களுக்கு http://www.tenders.tn.gov.in,மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.**

## வேலையின் விபரம்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | செலுத்த வேண்டிய டேவணித் தொகை | டெண்டர் படிவம் விற்பனை வரி உட்பட | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| | **அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 -2011** | | | | |
| 1 | **பேருந்து செல்லும் பிரதான சாலை தார்சாலையாக மாற்றுதல்** வார்டு எண்.6 கரட்டுப்பாளையம் முதல் மேட்டுக்கடை ஆலாம்பாளையம் சாலை வரை செல்லும் தார்சாலை புதுப்பித்தல் | 14,50,000 | 29,000 | 7,080 | 90 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | **<u>பேரூராட்சி குடிசைப் பகுதியில் உள்ள சாலைகள் மற்றும் குறுகிய சந்துகளுக்கு கான்கீரிட் சாலை அமைத்தல்</u>**<br>1) வார்டு எண்.14 காந்தி நகர் ஆதிதிராவிடர் காலனி வீதிகளில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 2,20,000 | 4,400 | 1,770 | 60 நாட்கள் |
| 3 | 2) வார்டு எண்.4 நேதாஜி வீதி குடியிருப்பு பகுதி வீதிகளில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 4,00,000 | 8,000 | 1,770 | 60 நாட்கள் |
| 4 | **<u>பேருந்து நிலையம் / நாளங்காடிகள் / சந்தை கட்டுமானப் பணிகள்</u>**<br>முத்தூர் பேருந்து நிலையத்தில் நிரந்தர இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டுதல் | 15,00,000 | 30,000 | 10,620 | 180 நாட்கள் |
| 5 | **<u>பேரூராட்சி பகுதியில் உள்ள சுடுகாடு இடுகாடுகள் மேம்பாடு செய்தல்</u>**<br>1) வார்டு எண்.15 சக்கரைபாளையம் பொது மயானம் பராமரிப்பு செய்தல் | 2,00,000 | 4,000 | 710 | 90 நாட்கள் |
| 6 | 2) வார்டு எண்.7 ஊடையம் பொது மயானம் பராமரிப்பு செய்தல் | 3,00,000 | 6,000 | 1,770 | 90 நாட்கள் |
| 7 | **<u>பேரூராட்சி விருப்பப்படி அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளுதல்</u>**<br>1) வார்டு எண்.13 முத்தூர் - வெள்ளகோவில் சாலை மேல்புற வீதியில் உள்ள தார்சாலை புதுப்பித்தல் | 3,00,000 | 6,000 | 1,770 | 60 நாட்கள் |
| 8 | 2) வார்டு எண்.3 சின்னமுத்தூர் நடுவீதி தார்சாலை புதுப்பித்தல் | 3,50,000 | 7,000 | 1,770 | 60 நாட்கள் |
| 9 | **<u>சமுதாயக் கூடம் கட்டுதல்</u>**<br>மோளகவுண்டன்புதூர் மதுரைவீரன் கோவில் வீதி பகுதியில் புதிய சமுதாயக்கூட கட்டிடம் கட்டுதல் | 10,50,000 | 21,000 | 7,080 | 180 நாட்கள் |
| 10 | **<u>பேரூராட்சிப் பகுதியில் குளம் குட்டை மேம்படுத்துதல்</u>**<br>சின்னமுத்தூர் கிராமம் கணக்கன்காட்டுப் புதூர் பகுதியில் உள்ள ஓடையில் தடுப்பணை கட்டுதல் | 5,50,000 | 11,000 | 3,540 | 90 நாட்கள் |

## <u>ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்</u>

1. முத்தூர் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.
2. குறிப்பிடப்பட்ட வேலைக்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ரசீதுடன் இணைத்து கொடுக்கப்படாத ஒப்பந்தபுள்ளிகளும், குறிப்பிடப்பட்ட கால அளவிற்கு பின்னர் வரும் ஒப்பந்தபுள்ளிகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது .
3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளிகள்**"செயல் அலுவலர்,முத்தூர் பேரூராட்சி"** என முகவரியிட்டு உறையின் மேல் பகுதியில் எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி எனதெளிவாக எழுதி கொடுக்க வேண்டும்.
5. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் போது டெண்டர் ஷெட்யூல்களில் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் இடாத ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
6. டெண்டர் ஷெட்யூல்களில் விலை விபரங்களை எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட வேண்டும்.
7. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளவோ அல்லது காரணம் ஏதும் காட்டாமல் நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

8. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.
9. வேலை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் ரூ. 20/– மதிப்புள்ள முத்திரைதாளில் ஒப்பந்தம் எழுதித்தர வேண்டும்.
10. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடிக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் வேலையை ரத்து செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு . இதனால் ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.
11. வேலை உத்திரவு வழங்கப்பட்டபின் வேலையை ஆரம்பிக்கப்படாமல் காலதாமதம் ஏற்படும்போது மேற்படி வேலையை ரத்து செய்து மீண்டும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையில் முன்னர் செலுத்திய வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
12. சாலை வேலைகள் முழு அளவில் முடித்தபின்னரே முழுத் தொகையும் வழங்கப்படும்.
13. சாலை பணிகளுக்குத் தேவையான தார் துறை மூலம் வழங்கப்பட மாட்டாது. கட்டுமானப் பணிக்கு சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் துறை மூலம் வழங்கப்படமாட்டாது.
14. கட்டுமான வேலைக்கான சேகரம் செய்யும் பொருட்கள் பொறியாளரால் ஏற்றுக் கொள்ளும் அளவில் தரம் வாய்ந்ததாக இருக்கவேண்டும்.
15. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளாதவர்களுடைய வைப்புத் தொகை சம்மந்தப்பட்டவரின் விண்ணப்பத்தின் பேரில் காசோலை மூலம் திருப்பிவழங்கப்படும்.
16. சம்பந்தப்பட்ட வேலைக்கான வைப்புத் தொகை தணிக்கை முடிவுற்று தடை ஏதும் இல்லையெனில் காசோலை மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும்.
17. வேலைகள் தொடர்பாக அரசால் வெளியிடப்படும் அன்றைய நிலையிலான உத்தரவுகளுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவார்.
18. பணிகள் துவங்கும் நிலை, நடைபெறும் நிலை மற்றும் முடிவுறும் நிலை ஆகிய மூன்று நிலைகளில் புகைப்படங்கள் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும். ‘
19. வேலைக்கான உத்திரவு கிடைக்கப் பெற்றவுடன் உத்தரவில் குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் பணி முடித்து அறிக்கை அனுப்புதல் வேண்டும்.
20. வேலை நடக்கும் இடத்தில் வேலைகள் குறித்த விபரம் அடங்கிய பெயர்ப்பலகை அமைக்கப்பட வேண்டும்.
21. செயல் அலுவலர் மற்றும் உயர் அலுவலர்களால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிகள் செய்யப்பட வேண்டும்.
22. வேலையை அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் வேறு யாருக்கும் மறு ஒப்பந்தம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தது தெரிய வந்தால் அவ்வேலைக்கான உத்திரவு ரத்து செய்வதுடன் அதனால் ஏற்படும் இழப்புகளை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
23. வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள் அனைத்திற்கும் இனம் வாரிய தரச்சான்று பெற்று இணக்கப்பட வேண்டும்.
24. வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் பணியினைத் துவங்க வேண்டும்.பணி துவங்க காலதாமதம் ஆகும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூ.100 /– வீதம் அபராதம் வசூலிக்கப்படும். மேலும் இதனால் ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரர்களே பொறுப்பாவார்கள்.
25. குறிப்பிட்ட தேதியில் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்ததாரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன், அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பபதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
26. சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழு தினங்களுக்குள், அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்ததாரர் சேகரிக்க வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட

பொருட்கள் பேரூராட்சியின் பொருட்களாகக் கருதி அப்புறப்படுத்தப்படும்.

27. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் விலை ஏறினால் அதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை பேரூராட்சி எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளாது.

28. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகளை செய்து முடிக்க வேண்டும்.

29. **<u>வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் இனங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| அ) | கூடுதல் வைப்புத் தொகை | : | 3% |
| ஆ) | வருமான வரி : | : | 2% |
| இ) | வருமான வரி மேல்வரி | : | 10% |
| ஈ) | கல்வி வரி (வருமானவரியில்) | : | 5% |
| உ) | விற்பனை வரி (கட்டிடப்பணிக்கு) | : | 2% |
| ஊ) | விற்பனை வரி (இதரப்பணிக்கு) | : | 4% |
| எ) | விற்பனை வரி மேல்வரி | : | 5% |
| ஏ) | தொழிலாளர் நலசந்தா தொகை | : | 0.3% |
| ஐ)) | தொழில்நுட்ப உதவியாளர் ஊதியம் | : | வேலை பட்டியல் படி |
| ஒ) | நிறுத்தி வைக்கப்படும் தொகை | : | ஏதாவது இருந்தால் அத்தொகைமட்டும் |

30. கூடுதல் விபரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
முத்தூர் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

**பெறுதல் :**

1. பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவரும், முத்தூர் பேரூராட்சி.

<u>நகல்:</u>

1) மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3) பேரூராட்சிகள் உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4) உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள், ஈரோடு.
5) உதவிப் பொறியாளர், காங்கயம் பேரூராட்சி.
6) செயல் அலுவலர், காங்கயம், மூலனூர், கன்னிவாடி, கொளத்துப்பாளையம், ருத்ராவதி பேரூராட்சிஅலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
7) ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், வெள்ளகோவில், காங்கயம், மூலனூர், தாராபுரம், அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
8) செயல் அலுவலர், மூன்றாம் நிலை நகராட்சி, வெள்ளகோவில்.
9) கிராம நிர்வாக அலுவலர், முத்தூர், சின்னமுத்தூர் மற்றும் ஊடையம்
10) தலைவர், முத்தூர் பேரூராட்சி. (மேசைக்கு)
11) பேரூராட்சி அலுவலக விளம்பர பலகைக்கு.
12) சம்பந்தப்பட்ட கோப்பு 77/2010